# தகவல் பெறுவதற்கான உரிமை என்றால் என்ன?

## அடிக்கடி எழுப்பப்படும் வினாக்கள்
## (FAQ)






## மோசமான வீதிகளால் பாதிக்கப்படும் எனக்கு பழுது பார்க்கும் செலவை வழங்குவது யார்?



கே எனது முச்சக்கர வண்டி பாதையில் உள்ள குழிகளில் விழுந்து உடைந்து பழுதடையும் போது எனது நகரத்தில் உள்ள பாதைகளை செப்பனிட்டு திருத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்திற்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக கேள்வி எழுப்புவதற்கு எனக்கு உரிமை இருக்கின்றதா?

ப ஆம். பாதை திருத்தப் பணிகளுக்காக எவ்வளவு பணம் செலவு செய்யப்பட்டது என்பது தொடர்பாக கேள்வி எழுப்பும் உரிமை இருக்கின்றது மேலும் இந்த திருத்தப் பணிகளுக்காக வெளிநாட்டு உதவியாக பணம் வழங்கப்பட்டிருந்தால் அதில் இருந்து எவ்வளவு தொகை செலவிடப்பட்டது என்பது தொடர்பாகவும் கேள்வி எழுப்ப உரிமை இருக்கின்றது. பாதையை செப்பனிடுவதற்காக பணியாற்றிய தொழிலாளர்களுக்கு எவ்வளவு ஊதியம் வழங்கப்பட்டது, மற்றும் திருத்த வேலைகளுக்கான மூலப் பொருட்களுக்கான செலவினம் என்ன? என்பது பற்றியும் கேள்வி எழுப்ப முடியும். அப்போதே பாதை திருத்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் சரியான முறையில் செலவிடப்பட்டதா அல்லது ஒப்பந்தக்காரர்களின் சட்டைப் பைகளுக்குச் சென்றதா என்பது பற்றி அறிந்து கொள்ள முடியும்.

**அதிபரைச் சந்திப்பதற்காக நான் எவ்வளவு நேரம் காத்திருப்பது?**




கே எனது குழந்தையை ஏன் அரசாங்க பாடசாலைக்கு அனுமதிக்கவில்லை என்று கேள்வி கேட்பதற்கு எனக்கு உரிமை இருக்கின்றதா?

ப ஆம் உங்களுக்கு கேள்வி எழுப்ப உரிமை இருக்கின்றது. நீங்கள் ஒரு வரி செலுத்தக்கூடிய பிரஜை என்ற அடிப்படையில் உங்களது பணத்தைக் கொண்டே பாடசாலைக் கட்டிடம் நிர்மாணிக்க செலவிடப்படுகின்றது என்ற முறையில் கேள்வி எழுப்புவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கின்றது. உங்களது பணத்தில் இருந்தே ஆசிரியர்களுக்கான சம்பளம் மற்றும் குழந்தைகளுக்கான வசதிகள் வழங்கப்படுகின்றது என்ற அடிப்படையில் உங்களுக்கு இந்த உரிமை இருக்கின்றது.

**பாலத்தின் திருத்த வேலைகளை ஆரம்பிப்பதற்கு நான் அதில் இருந்து கீழே விழும் வரையில் அதிகாரிகள் காத்திருக்கின்றார்களா?**



கே எனது பிரதேசத்திற்கு பாலம் ஒன்றை நிமாணிப்பதற்காக நவம்பர் மாத வரவு செலவுத் திட்டதில் ஒதுக்கப்பட்ட பணத்திற்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக பிரதேச சபையிடம் கேள்வி எழுப்பும் உரிமை எனக்கு இருக்கின்றதா?

ப நீங்கள் பொருட்களை கொள்வனவு செய்வதன் மூலம் அல்லது உங்களது சொத்துக்கள், மற்றும் வியாபார நிலையம் போன்ற உடமைகளுக்கு மறைமுகமாக வரி செலுத்துவதன் ஊடாக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பணம் செலுத்தக்கூடியவர் என்ற முறையில் கேள்வி எழுப்பும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது. பாலத்தை நிர்மாணிப்பதற்கு தொழிலாளர்களுக்காகவும் நிர்மாண வேலைகளுக்கான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குமாக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது என்பது தொடர்பாக கேள்வி எழுப்ப நீங்கள் உரிமை பெற்றுள்ளீர்கள். நிர்மாண வேலைகளை பொறுப்பேற்றுள்ள ஒப்பந்தக்காரர் யார், ஏன் பாலத்தின் நிர்மாணம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது தொடர்பாக கேள்வி எழுப்பும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது.

**மருத்துவ தேவையை நிறைவு செய்து கொள்வதற்காக நான் எத்தனை கிலோ மீட்டர் தூரம் வரை செல்ல வேண்டியிருக்கின்றது?**




கே உங்களது கிராமத்தில் ஒரு சிறிய ஆஸ்பத்திரியை நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டும் வைபவத்திற்காக பெருமளவான ஆதரவாளர்களும் அமைச்சரும் ஒன்று திரண்டனர். அடிக்கல் நடப்பட்டதோடு தேர்தல் முடிந்தவுடன் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டன. இந்த ஆஸ்பத்திரி நிர்மணத்திற்காக சுகாதார அமைச்சால் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது? நிர்மண ஒப்பந்தக்காரர் யார்? என்பது தொடர்பாக கேள்வி எழுப்பும் உரிமை எனக்கு இருக்கின்றதா? எவ்வளவு பணம் செலவிடப்பட்டது? பணம் மீதியாக இருப்பின் அப்பணத்திற்கு என்ன நடந்தது? என்பது தொடர்பாக கேள்வி கேட்கும் உரிமை எனக்கு உண்டா?

ப ஆம். உங்களால் கேள்வி எழுப்ப முடியும். இந்த திட்டம் தொடர்பாக சுகாதார அமைச்சிடம் அல்லது பிராந்திய சுகாதார அலுவலகத்திடம் இருந்த நீங்கள் கோரும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். நீங்கள் கோரும் தகவல்கள் வழங்கப்பட வில்லையாயின் வேறு தனியான அலுவலகம் அதுபற்றியும் கவனம் செலுத்தும்.

**கால்வாய்க்கும் பணத்திற்கும் என்ன நடந்திருக்கின்றது?**



கே விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு வசதியாக வயல்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காக கால்வாயை நிர்மாணிப்பதற்காக பாராளுமன்றம் பணத்தை ஒதுக்கியிருக்கின்றது.

ப எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டது? ஒதுக்கப்பட்ட அப்பணத்திற்கு என்ன நடந்தது? என்பது தொடர்பாக கேள்வி எழுப்பும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது.

---

**இதில் எங்களிடம் எத்தனை இருக்கின்றது?**



கிபீர் போர் விமானம்

ப தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விடயம் என்பதால் இவ்வாறான விடயங்கள் தொடாட்பாக கேள்வி எழுப்ப உங்களால் முடியாது.

**கேள்வி எழுப்பப்படும் விடயங்கள் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாயின் தகவல் அறியும் உரிமையானது இவ்விடயங்களில் விலக்களிக்கப் பட்டிருக்கின்றது.**

- தேசிய ஒருமைப்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பாதுகாப்புத்துறையுடன் தொடர்பான விடயங்கள்
- ஏதாவது வெளிநாடுகளுடன் அல்லது நிறுவனங்களுடன் இலங்கைக்கான உறவில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கலாம் என்று கருதும் விடயங்கள்
- நாணய மாற்று விகிதம் அல்லது வெளிநாட்டு பரிமாற்ற நடவடிக்கைகள்
- வங்கி அல்லது கடன் தொடர்பான ஒழுங்குவிதிகள்
- வரி அறவீடு
- பொருட்கள் சேவைகளிலான விலை நிர்ணயம், ஸ்திரத்தன்மை மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றுடன் செலுத்துகைகள், ஏனைய செலவினம், கட்டணம். ஊதியம், கொடுப்பனவுகள் மற்றும் வருமானம் தொடர்பான விடயங்கள்
- அரசாங்கத்தால் பெற்றுக் கொள்ளப்படும் பணம் தொடர்பான விடயங்கள்
- சர்வதேச வர்த்தகத்தில் பிரவேசிக்கும் உடன்படிக்கைகள் பற்றிய விடயங்கள்
- ஒருவரின் வர்த்தக ஆர்வங்களுக்கும் செயற்பாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் விதத்திலான வர்த்தக இரகசியங்களை வெளிப்படுத்துவது
- எவரையும் சம்பந்தப்படுத்தும் விதத்திலான மருத்துவ பதிவுகள் அல்லது இரகசியங்கள்
- குற்றவாளிகள் அல்லது தடுப்புக்காவலில் இருப்பவர்களோடு சம்பந்தப்படும் வகையிலான செயற்பாடுகளுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையிலான தகவல்களை வெளியிடல்
- தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட இரகசியத் தன்மைவாய்ந்த சட்ட அமுலாக்கல் தொடர்பான விடயங்கள் மூன்றாம் தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட பொது அதிகார சபை தொடர்பான இரகசியமான தகவல்கள்

**தகவல் உரிமை என்னறால் என்ன?**

தகவல் உரிமையானது முக்கியமான உரிமையாகும். ஏதோ ஒருவகையில் ஒவ்வொருவரும் வரி செலுத்துபவர்கள் என்ற முறையில் அவர்கள் செலுத்தும் பணத்திற்கு என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்கு உரிமை இருக்கின்றது. அதனால் தகவல் உரிமையானது நாட்டில் பணத்திற்கு என்ன நடக்கின்றது, அல்லது அப்பணம் எவ்வாறு செலவிடப்படுகின்றது, பிரதிபலம் எவ்வாறு அமைகின்றது போன்ற விடயங்கள் தொடாடபாக ஒரு மனிதனுக்கு விடயங்களை அறிந்து கொள்வதற்கான உரிமையாகும். ஆத்துடன் உங்களில் இருந்து இரகசியாக வைக்கப்பட் வேண்டிய அரசாங்கத்தின் உள்விடயங்களிலான தகவல்களைக் கூட அறிந்து கொள்ளும் வாய்ப்பை வழங்குகின்றது. மனிதர்கள் என்ற வகையில் இது மிக முக்கியமானதாக அமைவதால் 100 இற்கும் மெற்டபட்ட நாடுகளில் இந்த தகவல் அறியும் உரிமை வழங்கப்பட்டிருக்கின்றது.

**தெற்காசிய நாடுகளில் தகவல் உரிமைக்கு சட்டம் அங்கீகாரம் வழுங்கப்பட்டிருக்கின்றதா?**

ஆம். பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் அகிய நாடுகளில் தகவல் பெறும் உரிமைக்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும் இலங்கை, மாலைதீவு பூட்டான் ஆகிய நாடுகளில் தகவல் உரிமை இன்னும் அமுல்படுத்தப் படவில்லை.

**தகவல் பெறும் உரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதா?**

- 2002 ஆம் ஆண்டு அரசாங்கம் தகவல் பெறும் உரிமைச்சட்டம் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக பிரதமரின் தலைமையில் சட்டமா அதிபரையும் உள்ளடக்கியதாக ஒரு குழுவை நியமித்திருந்தது. இந்தக் குழுவில் ஊடகத்துறை சார்ந்த வல்லுனர்கள், சட்ட வல்லுனர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள். கல்விமான்கள், ஆகியோர் உள்ளடக்கப்பட்டிருந்தனர். அவர்களால் தயாரிக்கப்பட்ட தகவல் பெறும் உரிமைச்சட்டம் வரையப்பட்டு 2004 ஆம் ஆண்டு அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டதாயினும் அப்போதைய பாராளுமன்றம் அவசரமாக கலைக்கட்டட்டதால் அச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவில்லை.
- 2004 ஆம் ஆண்டு வரையப்பட்ட சட்ட மூலம் 2010 ஆம் ஆண்டு நீதி அமைச்சால் திருத்தம் செய்யப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.
- திருத்தம் செய்யப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டம் இப்போது ஜனாதிபதியிடம் இருக்கின்றது.

**கே: தகவல் உரிமைச் சட்டம் தொடர்பான தகவல்களை நான் எங்கிருந்து பெற்றுக்கொள்ள முடியும்?**

**ப: இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்திடம் இருந்து**

**இல : 96, கிருல வீதி, கொழும்பு 05**

**தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் : 011-5335500**

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute